



ஒடிசா ரயில் விபத்தில் சிக்கி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சந்தித்து ஆறுதல் கூறி, சிகிச்சை முறை குறித்து மருத்துவர்களிடம் கேட்டறிந்தார். உடன் அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் உள்ளிட்ட அதிகாரிகள் உள்ளனர்.

# பொள்ளாச்சியில் கலைஞர் திருவுருவப்படத்திற்கு மலரஞ்சலி!

## தென்றல் செல்வராஜ் தலைமை!

பொள்ளாச்சி, ஜூன் 5-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு பொள்ளாச்சியில் கழக சட்ட திட்ட திருத்தக்குழு சார்பாக குழுவின் உறுப்பினர் தென்றல் செல்வராஜ் தலைமையில், தலைமைச் செயற்குழு உறுப்பினர் எம்.அமுதபாரதி முன்னிலையில், அலங்கரிக்கபட்ட கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செய்து, கழக கொடிகம்பத்தை ஆர்வமுடன் புதுப்பித்த சிறுவனையே கழகத்தின் இருவண்ண கொடியேற்றி வைத்து, நாதஸ்வர மங்கள இசை முழங்க பட்டாசு வெடித்தும், இனிப்புகள் வழங்கியும் நிகழ்ச்சி நடைபெற்றது. அதைதொடர்ந்து முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் வி.பி. சந்திரசேகர், நகராட்சி துப்புரவு பணியாளர்களுக்கு காலை உணவு வழங்கினார்.

பொள்ளாச்சி நகராட்சி 13வது வார்டு நகர மன்ற உறுப்பினர் மணிமாலா தென்றல் நிகழ்வுக்கு வருகை தந்த அனைவரையும் வரவேற்று பேசினார். நிகழ்ச்சியில் நகர மன்ற துணை தலைவர் கௌதமன், நகர மன்ற உறுப்பினர்கள் பி.ஏ.செந்தில்குமார், ஈ.ஆர்.பி.பழனிசாமி, வட்ட செயலாளர்கள் பா.தர்மலிங்கம், கு.ராமச்சந்திரன், ஜெகதீசன், போஜராஜன், முன்னாள் நகர மன்ற உறுப்பினர்கள் கமலக்கண்ணன், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் தனம் தங்கதுரை, மணிமாறன் தென்றல் , மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர் ஜி.டி.கணேஷ் பிரசாத், நகர நிர்வாகிகள் ஆதிதிராவிடர் நலக்குழு லோகநாதன், மாணவரணி மகேந்திரன், ஜெகதீஸ், கௌதம், மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

---

ஒடிசா ரெயில் விபத்து: அதிர்ச்சியில் இருந்து இன்னும் மீளவில்லை!

# தமிழ்நாடு அரசு போர்க்கால அடிப்படையில் செயல்படுகிறது!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் ட்விட்டர் பதிவு!

சென்னை, ஜூன் 5-

ஒடிசா ரெயில் விபத்து குறித்து அதிர்ச்சியில் இருந்து இன்னும் மீளவில்லை என்றும், இது தொடர்பாக தமிழ்நாடு அரசு போர்க்கால அடிப்படையில் செயல்பட்டு வருகிறது என்றும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது ட்விட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைத்தளப் பதிவு வருமாறு:-

**ஒடிசாவில் நேற்று ஏற்பட்ட கோர விபத்தில் நூற்றுக்கணக்கான அப்பாவி மனித உயிர்கள் பறிபோயிருக்கும் அதிர்ச்சியில் இருந்து இன்னும் மீளமுடியவில்லை.**

**தமிழ்நாடு அரசு போர்க்கால அடிப்படையில் செயல்பட்டு வருகிறது. தற்போது வரை அடையாளம் காணப்பட்ட உயிரிழந்தோர், சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டோருள் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் யாரும் இல்லை எனத் தெரிய வந்துள்ளது.**

**ஒடிசா சென்றுள்ள தமிழ்நாடு அமைச்சர்கள் தலைமையிலான குழுவினர் மேலும் சில நாட்கள் அங்கேயே தங்கியிருந்து தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் அனைவரும் பாதுகாப்பாகச் சென்னை வந்தடைவதை உறுதி செய்யுமாறு உத்தரவிட்டுள்ளேன்.**

**மேலும், இவ்விபத்தில் காயமடைந்தவர்களுக்குச் சிகிச்சை அளிப்பதற்காகச் சென்னையில் உள்ள மூன்று அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது ட்விட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

---

ஒடிசா ரயில் விபத்து: 127 நபர்களில் 119 பேர் பாதுகாப்பாக உள்ளனர்!

# தமிழ்நாட்டைச் சேர்ந்த 8 பேரின் தகவல்கள் கோரப்படுகின்றன!

## தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

சென்னை, ஜூன் 5-

ஒடிசா ரயில் விபத்தில் தமிழ்நாட்டைச் சேர்ந்த 127 பேர் பயணம் மேற்கொண்டதாக தகவல்கள் பயணம் மேற்கொண்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இதில் 119 பேர் பத்திரமாக உள்ளனர். 8 பேரை தொடர்பு கொள்ள முடியவில்லை? அவர்கள் பற்றிய தகவல்கள் அறிந்திருப்பின் உடனடியாக மாநில அவசர கால செயல்பாட்டு மையத்திற்கு தகவல் தெரிவிக்கும்படி தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கோரப்பட்டுள்ளது.

இதுகுறித்து அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு வருமாறு:-

ஒடிசா மாநிலம் பாலசூரில் ஏற்பட்ட பெரும் இரயில் விபத்தில் காயமடைந்த தமிழ்நாட்டைச் சேர்ந்த பயணிகளுக்கு தேவையான மருத்துவம் மற்றும் இதர உதவிகளை செய்திடவும், உயிரிழந்தவர்களை கண்டறிந்து அவர்களது குடும்பத்தினருக்கு உதவிடவும், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரில் மீட்புக் குழு அமைக்கப்பட்டது. மேலும், மீட்புப் பணிகள் குறித்த விபரங்களை பெறுவதற்காகவும், பயணிகளின் உறவினர்கள் பயணிகளைப் பற்றிய விபரங்களை தெரிந்து கொள்வதற்கு ஏதுவாக 24 மணி நேர கட்டுப்பாட்டு அறை அமைக்கப்பட்டு முழு வீச்சில் சென்னை எழிலகத்தில் மாநில அவசரகால செயல்பாட்டு மையத்தில் செயல்பட்டு வருகிறது.

இந்நிலையில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரில் ஹவுராவிலிருந்து சென்னை நோக்கி வந்த கோரமண்டல் விரைவு இரயிலில் பயணம் செய்ய முன்பதிவு செய்த பயணிகளது பட்டியல் தென்னக இரயில்வேயிலிருந்து பெறப்பட்டு அதில் தமிழ்ப் பெயர் கொண்டவர்களையும், தமிழ்நாட்டில் இருப்பிட முகவரி அளித்துள்ள 127 நபர்களது பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது. இதுவரை தயாரிக்கப்பட்ட பட்டியலில் உள்ள 127 நபர்களை மாநில அவசர கால செயல்பாட்டு மையத்திலிருந்து தொடர்பு கொள்ளப்பட்டதில், 119 நபர்கள் பாதுகாப்பாக உள்ளதாக தெரியவந்துள்ளது. எஞ்சிய 8 நபர்களது செல்பேசி மற்றும் முகவரி இல்லாத நிலையில் அவர்களை தொடர்பு கொள்ள இயலாத நிலை ஏற்பட்டுள்ளது. ஒடிசாவில் முகாமிட்டுள்ள மீட்புக் குழுவும், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் கட்டுப்பாட்டு அறையும் இணைந்து தொடர்பு கொள்ள இயலாத நபர்களுடைய விபரங்களை சேகரிக்கும் பணியினை மேற்கொண்டு வருகிறது.

மேலும், இந்த இரயில் விபத்தில் பாதிக்கப்பட்டு உயிரிழந்த நபர்களது விவரங்கள் ஒடிசாவில் இதுவரை சேகரிக்கப்பட்டதில் தமிழ்நாட்டை சேர்ந்த எவரும் இந்த இரயில் விபத்தில் உயிரிழக்கவில்லை என்பது தெரியவருகிறது. மேலும், விபத்தில் காயமுற்று சிகிச்சை பெற்றுவரும் நபர்களது விபரங்களை இதுவரை பரிசீலனை செய்ததில் தமிழ்நாட்டை சேர்ந்தவர்கள் யாரும் காயமுற்று சிகிச்சை பெறவில்லை என்ற விவரமும் தெரியவந்துள்ளது.

இந்நிலையில், இதுவரை சேகரிக்கப்பட்ட விபரத்தின் அடிப்படையில் தொடர்புகொள்ள இயலாத நிலையில் உள்ள கீழ்க்கண்ட 8 நபர்களது உறவினர்கள், நண்பர்கள் ஆகியோர், இவர்கள் குறித்த தகவல் அறிந்திருப்பின் மாநில அவசரகால செயல்பாட்டு மையத்திற்கு எண்களில் தகவல் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

வ.எண். பெயர் மற்றும் வயது

1 நாரகணிகோபி, ஆண், வயது 34

2 கார்த்திக், ஆண், வயது 19

3 ரகுநாத், ஆண். வயது 21

4 மீனா, பெண், வயது 66

5 எ. ஜெகதீசன், ஆண், வயது 47

6 கமல், ஆண், வயது 26

7 கல்பனா, பெண், வயது 19

8 அருண், ஆண், வயது 21

மாநில அவசரகால செயல்பாட்டு மைய உதவி எண்கள்

கட்டணமில்லா தொலைபேசி - 1070

செல்பேசி - 9445869843

இவ்வாறு அதில் குறிப்பிட்டுள்ளது.

---

தி.மு.க. மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி, பிரச்சாரக்குழு, சமூக வலைதளக்குழு, ஆலோசனைக் குழு சார்பில்

# கலைஞர் நூற்றாண்டு விழா! இன்று நடைபெறுகிறது!

## முத்தமிழறிஞர் கலைஞரின் திரைப்படப்பாடல்களை தொகுத்து இசையரங்கம், நாட்டிய அரங்கம்!

சென்னை, ஜூன் 5

தி.மு.க. மகளிரணி, மகளிர் தொண்டரணி, பிரச்சாரக்குழு, சமூக வலைதளக்குழு, ஆலோசனைக் குழு சார்பில் இன்று (5.6.2023, திங்கட்கிழமை) மாலை 5 மணிக்கு அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு தொடக்க விழாவை முன்னிட்டு தலைவர் கலைஞர் எழுதிய திரைப்படப் பாடல்களைத் தொகுத்து இசையரங்கம், நாட்டிய அரங்கம் நடைபெறுகிறது.

நிகழ்ச்சியில் மகளிரணித் தலைவர் விஜயா தாயன்பன் வரவேற்புரையாற்றுகிறார். மகளிரணிச் செயலாளர் ஹெலன் டேவிட்சன், தொண்டரணிச் செயலாளர் நாமக்கல் ராணி, மகளிரணி இணைச் செயலாளர் குமரி விஜயகுமார், மகளிர் தொண்டரணி இணைச் செயலாளர் தமிழரசி ரவிக்குமார் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இன்று (5.6.2023, திங்கட்கிழமை) மாலை 5 மணிக்கு திரைப்பட இசையமைப்பாளர் கலைமாமணி தாயன்பன் குழுவினரின் இசை நிகழ்ச்சியும், மாலை 6 மணிக்கு கலைமாமணி பார்வதி ரவி கண்டசாலா குழுவினரின் 25 நடனக் கலைஞர்கள் பங்கேற்கும் நாட்டிய நிகழ்ச்சியும் நடைபெறுகிறது.

மாலை 7 மணிக்கு வாழ்த்தரங்கம் நடைபெறுகிறது. நிகழ்ச்சிக்கு தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. தலைமை தாங்குகிறார்.

எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி., கழகவிளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளர் தயாநிதி மாறன் எம்.பி., தலைமைக் கழக செய்தி தொடர்பு அணித்தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன், மாநில திட்டக்குழு உறுப்பினர் எழிலன் எம்.எல்.ஏ., சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு எம்.சி., ஆயிரம் விளக்கு பகுதிச் செயலாளர் மா.பா. அன்புதுரை ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர்.

மகளிரணி துணைச் செயலாளர்கள் அமைச்சர் கயல்விழி செல்வராஜ், பவானி ராஜேந்திரன், அங்கையற்கண்ணி, மகளிர் தொண்டரணி துணைச் செயலாளர்கள் சத்யா பழனிகுமார், ரேகா பிரியதர்ஷினி, விஜிலா சத்யானந்த், மாலதி நாகராஜ்,

மகளிர் பிரச்சாரக்குழு செயலாளர்கள் சேலம் சுஜாதா, ராணி ரவிச்சந்திரன் எம்.சி., அமலு எம்.எல்.ஏ., டாக்டர் மாலதி நாராயணசாமி, மோ. தேன்மொழி, ஜெசி பொன்ராணி, சமூக வலைதளப் பொறுப்பாளர்கள் ரத்னா லோகேஸ்வரன் எம்.சி., டாக்டர் யாழினி, ரியா,

ஆலோசனைக்குழு உறுப்பினர்கள் டாக்டர் காஞ்சனா கமலநாதன், சங்கரி நாராயணன், கார்ல் மார்க்ஸ், சித்திரமுகி சத்யவாணிமுத்து, வாசுகி ரமணன், காயத்ரி சீனிவாசன், மலர் மரகதம், சிம்லா முத்துச்சோழன் ஆகியோர் அனைவரையும் வரவேற்கின்றனர்.

முடிவில் உமா மகேஸ்வரி நன்றி கூறுகிறார்.

---

கலைஞரின் நூற்றாண்டு - மதச்சார்பற்ற

# அரசியல் களத்திற்கு வலு சேர்ப்பதாக அமையட்டும்!

## தீக்கதிர் நாளேடு தலையங்கம்

சென்னை, ஜூன் 5-

கலைஞரின் நூற்றாண்டு மதச்சார்பற்ற அரசியல் களத்திற்கு வலு சேர்ப்பதாக அமையட்டும் என்று தீக்கதிர் நாளேடு தலையங்கம் எழுதியுள்ளது.

அது வருமாறு: -

தமிழ்நாட்டின் முதல்வராகவும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராகவும் விளங்கிய கலைஞர் அவர்களின் நூற்றாண்டு (ஜூன் 3) துவங்கியது.

நவீன தமிழக அரசியல் வரலாற்றை கலைஞரை தவிர்த்துவிட்டு யாரும் எழுதி விட முடியாது. பன்முகத் திறன் கொண்ட அவர் கலைத்துறையிலும், இலக்கியத்துறையிலும், இதழியல் துறையிலும், நிர்வாகத்துறையிலும் அழுத்தமான முத்திரைகளை பதித்துள்ளார்.

1969இல் முதல்வராக பொறுப்பேற்றுக் கொண்ட அவர் 1971, 1989, 1996, 2006 என ஐந்து முறை தமிழ்நாட்டின் முதல்வராக பணியாற்றியுள்ளார். 1957ஆம் ஆண்டில் தமிழக சட்டப் பேரவைக்கு தேர்வு செய்யப்பட்ட அவர், தாம் போட்டியிட்ட அனைத்து தேர்தல்களிலும் வெற்றி பெற்றவர் என்பதும் குறிப்பிடத்தக்க ஒன்று.

அவசர நிலைக் காலத்தின் போது ஜனநாயக உரிமைகளைப் பாதுகாக்க அச்சுறுத்தல்களை எதிர்கொண்டு அவர் உறுதியாக பணியாற்றியது என்றென்றும் நினைவு கூரப்படும். அதேபோன்று மாநில உரிமைகளுக்காகவும், மாநில சுயாட்சிக்காகவும் அவர் அயர்வின்றி களமாடியுள்ளார்.



தீக்கதிர்

2023 ஜூன் 03 சனிக்கிழமை

பன்முகத் திறன் கொண்ட கலைஞரின் நூற்றாண்டு

பெரியார் நினைவு சமத்துவபுரம், வள்ளுவர் கோட்டம், கன்னியாகுமரியில் திருவள்ளுவருக்கு சிலை, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் அருந்ததிய அமைப்புகளின் வேண்டுகோளை ஏற்று அருந்ததிய மக்களுக்கு உள்ஒதுக்கீடு, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கான இடஒதுக்கீட்டின் ஒரு பகுதியாக இஸ்லாமியர்களுக்கு தனி ஒதுக்கீடு, பெண்களுக்கு சொத்துரிமை என அவரது தனித்த சாதனைகள் என்றென்றும் தமிழக மக்களால் நினைவு கூரப்படும்.

இந்தித் திணிப்பை எதிர்த்து மாணவப் பருவத்திலேயே பொது வாழ்க்கைக்கு வந்த அவர், தனது இறுதிக் காலம் வரை பொது வாழ்வில் பணியாற்றியதன் மூலம் நீண்ட நெடிய பொது வாழ்க்கைக்கு சொந்தக்காரராக திகழ்ந்தார்.

தன்னுடைய துடிப்புமிக்க வசனங்களின் மூலம் தமிழ் திரையுலக வரலாற்றில் தனித்தடம் பதித்தவர் அவர். இளம் வயதிலேயே முரசொலி ஏட்டை துவக்கி நடத்திய அவர் இந்தியஅளவில் ஒரு முன்னுதாரணமான ஊடகவியலாளராக விளங்கினார். இலக்கியத் துறையிலும் அவருடைய பங்களிப்பு அசாத்தியமான ஒன்று.

தீக்கதிர் நாளேட்டின் முதன்மையான வாசகர்களில் ஒருவராக விளங்கிய அவர், தீக்கதிர் சுட்டிக்காட்டிய பல்வேறு மக்கள் பிரச்சனைகளுக்கு தீர்வு கண்டுள்ளார். தீக்கதிர் வெளியிட்ட பெரும்பாலான மலர்களுக்கு வாழ்த்துரை வழங்கியுள்ளார்.

மதவெறி சக்திகளுக்கு எதிரான விரிந்து பரந்த களத்தையும், ஒற்றுமையையும் கட்ட வேண்டிய இன்றைய சூழலில் அவர் முன்வைத்த பகுத்தறிவும், சுயமரியாதைக் கருத்துக்களும், மாநில உரிமை முழக்கங்களும் சமூக சீர்திருத்த நடவடிக்கைகளும் ஜனநாயக சக்திகளுக்கு வலுவூட்டக்கூடியதாக அமைந்துள்ளன. தமிழக அரசியலையும் தாண்டி இந்திய அளவில் மதிக்கத்தக்க தலைவர்களில் ஒருவராக விளங்கிய அவரது நூற்றாண்டு மதச்சார்பற்ற அரசியல் களத்திற்கு வலிமை சேர்ப்பதாக அமையட்டும்.

இவ்வாறு தீக்கதிர் நாளேடு தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.

---



மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. சார்பில் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மதுரை சிம்மக்கல்லில் உள்ள முத்தமிழறிஞர் கலைஞர் திருவுருவ வெண்கல சிலைக்கு மாநகர் மாவட்ட செயலாளர் கோ தளபதி எம்.எல்.ஏ. தலைமையில் நிர்வாகிகள் மாலை அணிவித்து மரியாதை செலுத்திய போது எடுத்த படம். இதில் கழக நிர்வாகிகள் வ.வேலுசாமி, பெ. குழந்தை வேலு, மேயர் இந்திராணி பொன் வசந்த் மா. ஜெயராம், தனச்செல்வம், ஒச்சு பாலு, சம்மட்டிபுரம் கணேசன், மூவேந்திரன், வக்கீல் ராகவன், மற்றும் திரளான கழக நிர்வாகிகள் கழகத்தினர் பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# லிபியாவில் இந்திய மாலுமிகள் விடுவிப்பு!

திரிபோலி, ஜூன் 5-

கிரீஸ் நாட்டை சேர்ந்த நிறுவனத்திற்கு சொந்தமான எம்.டி.மாயா1 என்ற வணிக கப்பல் கப்பலில் இந்தியாவை சேர்ந்த 9 மாலுமிகள் உள்பட பலர் இருந்தனர். அந்த கப்பல், லிபியாவின் கடற்கரைக்கு அருகே வந்த போது பழுதடைந்தது. அப்போது கப்பலில் இருந்தவர்களை லிபியா உள்ளூர் போராளிகள் சிறைபிடித்தனர். இந்திய மாலுமி களை மீட்பதற்கான நடவடிக்கைகளில் இந்திய அரசு ஈடுபட்டது. வெளிவிவகார அமைச்சகமும், இந்திய தூதரகமும் லிபியாவில் உள்ள அதிகாரிகளை தொடர்பு கொண்டு இந்திய மாலுமிகளை மீட்பதற்கான ஆலோசனையில் ஈடுபட்டனர். இந்த நிலையில் லிபியா கிளர்ச்சி குழுவால் சிறை பிடிக்கப்பட்ட 9 இந்திய மாலுமிகள் விடுவிக்கப்பட்டனர்.

---

# 32 ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



தோற்றம் : 25.7.1931

மறைவு : 5.6.1991

**எஸ்.மோகன்தாஸ்**

**முரசொலி மாறன் குடும்பத்தினர்**

எம்.அசோகன் – அ.சுமதி

சி.கண்மணி – கே.கவிதா

**மற்றும் பேரக்குழந்தைகள்**